விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 21 திங்கட்கிழமை (05.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 76



ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து


# வெளிநாட்டு தலையீடுகளுக்கு நான் என்றும் எதிரானவன்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய

(கொழும்பு)

வடக்கு கிழக்கு விவகாரங்களில் தலையிடும் சர்வதேச உதவு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நான் என்றும் எதிரானவன்.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தபாயவை நஞ்சூட்டிக் கொல்லத் திட்டமாம்

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நஞ்சூட்டிக் கொல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக இலங்கையின் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

கடற்படையில் இருந்து வெளியேறிய முன்னாள் வீரர்களை வைத்தே இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான முழு விபரங்களும் பாதுகாப்புச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் குறித்து கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருப்பதாவது;

புலனாய்வுத்துறையினர் இது தொடர்பாக எனக்கு விபரங்களை கடந்த வியாழக்கிழமை சமர்ப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆதரவாக தி.மு.க.செயற்படுகிறது

### சுப்பிரமணிய சுவாமி குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக்கழக அரசு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சாதகமாகவுள்ளதாக இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் திருநெல்வேலியில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்குபவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனக் கூறும் தமிழக முதல்வர் மு.கருணாநிதி இதுவரை ஏன் எவரையும் கைது செய்யவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-மகிந்த தேர்தல் ஒப்பந்தம் நகைப்புக்கிடமான ரணிலின் கதை

### நவீன் திஸ்ஸநாயக்கா கருத்து

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்கள் வாக்களிக்க விடாது தடுக்கப்பட்டமைக்கு மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரக் குழுவினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட இரகசிய உடன்படிக்கை தான் காரணம் எனதற்போது ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டுவதும்,

இது தொடர்பில் பிரசார இயக்கம் ஒன்றை ஐக்கிய தேசியக்கட்சி ஆரம்பிக்கவிருப்பதாகவும் தெரிவித்திருப்பதையிட்டு தமக்கு அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் நவீன் திஸ்ஸநாயக்கா, ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது நான் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி அமைப்பாளர்கள், தகுந்த புள்ளிவிபரங்களுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ,ஜே.வி.பி. ஆகியவற்றுக்கு கிடைத்த வாக்குகளோடு ஒப்பிடும் பொழுது எமது கட்சி வெற்றி பெறுவதற்கு ஆறு இலட்சம் வாக்குகள் அதிகம் தேவை.

இதற்கான ஒரே வழி 2004 தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெற்று ஆறு இலட்சம் வாக்குகளை ஐக்கிய தேசியக்கட்சி பெற வேண்டு (04 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர் பதிவு இம்மாதம் 15 முதல் ஆரம்பம்

### யாழ்.பல்கலைக்கழக அனுமதி தாமதமாகும்

(கொழும்பு)

2007 ஆம் ஆண்டிற்கான பல்கலைக் கழக மாணவர் பதிவு எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவிருப்பதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

15,17,20 ஆம் திகதிகளில் மொரட்டுவப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் அனுமதிக்கப்படவிருப்பதுடன் நாட்டின் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவான மாணவர்களின் பதிவு மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

இம் முறை பல்கலைக்கழகங்களுக்கு 18 ஆயிரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர். யாழ்.பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது சற்றுக் காலதாமதமடையலாம் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

(ந-5)

## அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

### ஐக்கிய தேசியக்கட்சி

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சியினர் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் இம் மாதம் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள கட்சியின் விசேட கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படுமென பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அவர் மக்களின் வாழ்க்கைச் செலவு வானம் அளவிற்கு உயர்ந்துள்ளது. அரசாங்கத்தின் பிழையான நிர்வாகம் காரணமாகவே இந் நிலை ஏற்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளுடன் மகிந்த செய்து கொண்ட ஒப்பந்தத்தில் பிரதான பிரதிநிதியாக பசில் ராஜபக்ஷவே பங்குபற்றி இருந்தார்

### முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின்போது சுதந்திரக் கட்சிக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற ஒப்பந்தத்தின் போதான பேச்சுக்களில் என்னுடன் பிரதான பங்கை பசில் ராஜபக்ஷவேவகித்திருந்தார்என முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக சிறிபதி சூரியாராட்சி மேலும் தெரிவித்ததாவது, ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவே என்னுடன் முதல் சுற்றுப்பேச்சுக்களில் கலந்து கொண்டார். அதில் கருணாவை கையளிப்பது, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மீதான படுகொலை போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

எனினும் கதிர்காமரின் படுகொலை தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும் எனக்கும் வாதங்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படையினர் மீது அம்பாறையில் தாக்குதல்

அம்பாறை படமஸ்தாப என்ற பிரதேசத்தில் நேற்று முற்பகல் 9.35 மணியளவில் விசேட அதிரடிப்படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மீது இத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் இதன் போது அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந் (04 ஆம் பக்கம் பார்க்க)

# தூதுவர்கள் மீதான எறிகணை வீச்சு அமைச்சர்களுக்குள் கருத்து முரண்பாடு

கடந்த மாதம் 27 ஆம் திகதி மட்டக்களப்பில் இடம்பெற்ற மோட்டார் எறிகணைத் தாக்குதலில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மயிரிழையில் உயிர் தப்பியது தொடர்பாக அரசாங்கத் தரப்புகளுக்கிடையில் பெரும் கருத்து முரண்பாடுகள் தோன்றியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பேரனர்த்த முகாமைத்துவ அமைச்சு தமது ஆலோசனைகளைக் கேட்கவில்லை என பாதுகாப்பு அமைச்சும், வெளிவிவகார அமைச்சும் குற்றம் சுமத்தியிருக்கின்றன.

எனினும் இராஜதந்திரிகளின் உயிருக்கு ஆபத்தான சம்பவத்திற்கு யார் பொறுப்பானவர்கள் என்பது தொடர்பாக வாக்குவாதங்கள் பல மட்டங்களில் எழுந்திருக்கின்றன. தாம் பயணத்திற்கு அனுமதி வழங்கிய போதும் ஆரம்பத்திலேயே அதற்கு எதிராக ஆலோசனைகளைக் கூறியதாகப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்திருக்கின்றது.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவும் 23 ஆம் படைப் பிரிவுத் தளபதி பிரிகேடியர் தயாரட்ணாயக்காவும் மட்டக்களப்புப் பயணத்திற்கு எதிராக அமைச்சர் மகிந்த சமரசிங்கவுக்கு ஆலோசனைகளை வழங்கியதுடன் கள நிலைமைகள் முக்கிய அதிகாரிகளின் பயணத்திற்கு உகந்தது அல்ல எனவும் தெரிவித்திருந்ததாக மூத்த அரச அதி காரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

இதனிடையே மட்டக்களப்புப் பயணத்தின் போது பாரம்பரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. நாட்டின் தலை நகரை விட்டுச் செல்லும் இராஜதந்திரிகள் வெளிவிவகார அமைச்சின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை மாத்திரமே பெற்றிருந்தனர் என வெளிவிவகார அமை ச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்திருந்தார். ஆனால் மட்டக்களப்புப் பயணம் தொடர்பாகத் தனக்கு எந்தவிதமான எதிரான ஆலோசனைகளும் வழங்கப்படவில்லை எனவும் அப்படி வழங்கப்பட்டிருந்தால் தான் அந்தப்பயணத்தை தவிர்த்திருப்பேன் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித் துள்ளார்.

மட்டக்களப்புப் பயணம் தொடர்பாக தமக்குத் தெரிவிக் கப்படவில்லை என்ற றோகித போகொல்லாகமவின் கருத்துத் தவறானது. பொதுமக்கள் தொடர்பாடல் பணிப்பாளர் நாயகம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செய லாளர் ஆகியோர் கடந்த மாதம் 20 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். அன்றுதான் பயண ஏற்பாடுகள் தொடர்பாக முடிவுகள் எடுக்கப்பட்டன.

மேலும் எமது பயணத்தின்போது பொது மக்கள் தொடர்பாடல் பணிப்பாளர் நாயகமும் எம்முடன் உலங்கு வானூர் தியிலிருந்தார். எனவே தங்களுக்குத் தெரியாதுஎன எவ்வாறு வெளிவிவகார அமைச்சுக் கூறலாம் என அவர் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான் பிரட்ஸ்கர் இவ்வாரம் முற்பகுதியில் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்திருக்கின்றன.

ஆனால் இது ஒரு வழமையான பயணமே. மட்டக்களப்புத் தாக்குதல் தொடர்பான விளக்கங்களுக்காக தமது தூதுவர் கிளிநொச்சிக்குச் செல்லவில்லை என நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-5)

## நாதஸ்வர மேதைகள் மூவர் இன்று கௌரவிப்பு

காரைநகர் மணற்காடு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் 2 ஆம் நாள் உற்சவ தினமான இன்று நாதஸ்வர மேதைகள் மூவர் ஆலயத்தில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கோண்டாவில் நாதஸ்வர மேதைகளான வி.கே.கானமூர்த்தி, வி.கே.பஞ்சமூர்த்தி, அவரது மகன் குமரேஸ் ஆகிய மூவரும் நாதஸ்வர கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (ச-5)

## பிரதித் தலைவர் பதவியை நீக்குவதற்கு ஐ.தே.க. முடிவு

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் மற்றும் உதவித் தலைவர் ஆகிய பதவிகளை நீக்குவதற்கான இணக்கப்பாட்டிற்கு அக் கட்சியின் அரசியல் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசியல் குழுவின் தீர்மானம் எதிர்வரும் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

குறித்த இரண்டுபதவிகளும் புதிதாக உருவாக்கப்பட்டு கட்சி யாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டவை என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ந-5)

## சிற்றூழியர்களின் வெற்றிடங்களை நிரப்ப கல்வி அமைச்சு துரித நடவடிக்கை

(கொழும்பு)

கல்வி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் காணப்படும் சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்ப பிரதிக் கல்வியமைச்சர் எம். சச்சிதானந்தன் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் ஊடகச் செயலாளர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள தமிழ் மொழிக் கல்வியியல் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள்என்பவற்றில் காணப்படும் சிற்றூழியர் வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்பிரகாரம் பலாலி, கோப்பாய், அட்டாளைச்சேனை, கொட்டகல ஆகிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலும் வவுனியா, மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை தர்கா நகர் மற்றும் சிறிபாத தேசிய கல்வியியற் கல்லூரிகளில் காணப்படும் சிற்றூழியர் வெற்றிடங்களையும் நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த வாரம் கல்வியமைச்சில் இடம்பெற்றது.

இந் நேர்முகப் பரீட்சைக்கு 175 பேர் அழைக்கப்பட்டிருந்ததாகவும் இதில் தெரிவு செய்யப்படுவோருக்கான நியமனங்கள் இம் மாத இறுதிக்குள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அமைச்சரின் ஊடகச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீடுகள் இனிமேல் கொழும்பு நீதிமன்றில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

(கொழும்பு)

மாவட்ட சிவில் நீதிமன்றங்களில் இடம் பெறும் வழக்கு விசாரணைகளின் தீர்ப்புகளுக்கு எதிராக சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் இனிமேல் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனவும், அவை மாகாண மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களிலேயே தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நடைமுறை கடந்த முதலாம் திகதி முதல் இடம்பெறுவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கமைய இது தொடர்பான மேன்முறையீடு மற்றும் இடைக்கால தடை உத்தரவு கோருதல் என்பன மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்யப்பட வேண்டும். அதற்கமைய விசாரணைகளும் இடம்பெறும்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்காக நாட்டில் மாகாண மட்டத்தில் பத்து சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அவற்றில் சில நீதிமன்றங்கள் செயற்பட ஆரம்பித்துள்ளன என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ந-5)

## மூவின மக்களும் இணைவதன் மூலமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்

### சிவனொளிபாதமலை அடிவாரத்தில் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் இணைந்து செயற்படுவதன் மூலமே நிரந்தர சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்த முடியும் என ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிவனொளிபாதமலை அடிவாரமான மஸ்கலியா நல்லதண்ணீர் நகரில்அமைந்துள்ள சுமன சமன் தேவாலயம் புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நல்ல தண்ணீர் சுமனசமன் தேவாலயத்தில் பிரதமகுரு பிராமணவத்தே சீவிலிதேரர் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் சுமன் தெய்வத்தின் திருவுருவச் சிலையை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்து உரையாற்றினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் பௌத்த,இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயத்தவர்கள் அனைவராலும் தரிசிக்கப்படும் சிவனொளிபாதமலை உலக நாடுகள் அனைத்திலும் பிரசித்தி பெற்றுள்ளதோடு உல்லாசப் பயணிகள் பெருமளவில் வந்து போகும் இடமாகவும் திகழ்கின்றது. இவ்வாறு கலாசார ஒற்றுமைகள் ஏற்பட்டது போல இந்நாட்டில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுபடுவதன் மூலமே நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்த முடியும்.

அவ்வாறு நாட்டு மக்கள் அனைவரும் ஒரே சிந்தனையில் ஒரே வழியில் சென்றால் மாத்திரமே அமைதியும் சமாதானமும் ஏற்படும், நாட்டில் அபிவிருத்தியும் ஏற்படும். எனினும் இந்த முயற்சி வெற்றி பெறவும் நாடு சுபீட்சமடையவும் அனைவரது ஒத்துழைப்பும் தேவை என்றார். (ந-5)

## மாணவனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்ற மாணவனைக் காணவில்லை என யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போனவர் நெல்லியடியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் இசைவாணன் (வயது-15) என்ற மாணவன் வியாழக்கிழமை மாலை தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு சென்றதாகவும் அவர் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த மாணவனின் சைக்கிள் நெல்லியடி திரையரங்கு ஒன்றின் வளவிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவில் மேற்கொண்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## இலங்கை அரசின் நடவடிக்கைக்கு சீன அரசு ஆதரவு வழங்கும்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை வரவேற்பதாக சீன அரசு தெரிவித்துள்ளது.

சீனாவும் இலங்கையும் நேற்று பீஜிங்கில் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இரு தரப்பு உறவுகள்,பொதுவான அக்கறை கொண்ட சர்வதேச மற்றும் பிராந்திய பிரச்சினைகள்குறித்த கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு இரு நாடுகளும் உடன்பாட்டிற்கு வந்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை-சீனாவுக்கிடையிலான இராஜதந்திர உறவு ஏற்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதையடுத்து 2007 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவாண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரே சீனா என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்து நாட்டின் ஒன்றிணைப்புக்காக சீன அரசு மேற்கொண்டு வரும் அனைத்து முயற்சிகளையும் இலங்கை ஆதரிப்பதாக அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டில் இறையாண்மை, தேசிய ஒற்றுமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணிக் காப்பதில் இலங்கைமேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தொடர்ந்து சீனா ஆதரவு வழங்கும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-3)

## பத்து இலட்சம் பேருக்கு சிறுநீரகம் பாதிப்பு 12 ஆயிரம் பேரின் நிலை மிகவும் மோசம்

### சிறுநீரகம் மாற்றும் சங்கத்தின் செயலாளர் தகவல்

இலங்கையில் சுமார் 10 இலட்சம் பேருக்கு சிறு நீரகம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 12 ஆயிரம் பேரின் நிலை மிகவும் மோசமானதாகக் காணப்படுவதாகவும் இலங்கை சிறுநீரகம் மாற்றும் சங்கத்தின் பிரதான செயலாளர் டாக்டர் ஏ.எல்.எம்.நசார் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 12 வயதுக்குக் குறைந்த சிறுவர்களில் பத்து வீதமானவர்கள் சிறுநீரக பாதிப்புக்கு இலக்காகியிருப்பது தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இடம் பெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இம் மாதம் 8 ஆம் திகதி உலக சிறுநீரக தினமாக அமைந்துள்ளதால் இதற்கான விளக்கமளிக்கும் வகையில் இவ் வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வருடத்திற்கு சுமார் 2 ஆயிரத்து 500 பேருக்கு சிறுநீரகம் பாதிக்கப்படுகிறது. ஆனால் 200 பேருக்கேனும் சிறுநீரக மாற்று நடவடிக்கைகள் இடம் பெறுவதில்லை இலங்கையில் இதுவரை நிலவும் சிறுநீரக பாதிப்பை குணப்படுத்துவதற்காக இத் துறையில் நிபுணத்துவம் பெற்ற விசேட வைத்தியர்கள் 20 பேர்வரை நாட்டுக்குத் தேவைப்பட்ட போதும் ஆறு விசேட நிபுணத்துவ வைத்தியர்கள் மட்டுமே பணி புரிகின்றனர்.

இலங்யையில் சிறுநீரக பாதிப்பிற்குள்ளான நோயாளர்கள் 14 வீதமானவர்களுக்கு நீரிழிவு நோய் காணப்படுவதுடன் 20 வீதமானவர்கள் 40 வயதிற்கும் மேற்பட்டவர்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சங்கத்தின் தலைவரான டாக்டர் சூலா ஹெரத் கருத்துத் தெரிவிக்கையில்; வயது முதிர்ந்தோர் வருடத்திற்கு ஒரு தடவையேனும் வைத்திய பரிசோதனை செய்து கொள்வது அவசியமாகும். அரச வைத்தியசாலைகளில் இலவசமாக வைத்திய பரிசோதனைகள் நடைபெறுகின்றன. இப் பரிசோதனைகள் மூலம் சிறுநீரகம் பாதிக்கப்படுவதற்கான ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிந்து சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும். இலங்கையில் உள்ள சிறு நீரக நோயாளர்கள் அநேகமானோர் தங்களுக்கு சிறுநீரக நோய் கண்டிருப்பதை பல வருடங்கள் கடந்த பின்னரே அறிந்து கொள்கின்றனர்.

சில காலம் செல்லும் வரை இந் நோய் கண்டதற்கான அறிகுறிகள் தென்படுவதில்லை. இந் நோய் கண்டிருப்பதை அறிந்து கொள்ளும்போது 80 வீதமானவர்களது சிறுநீரகம் செயலிழக்கும் நிலையை அடைந்திருக்கும். எனவே இதிலிருந்து பாதுகாப்புப் பெற புகைத்தலை தவிர்ப்பதுடன் உணவு வகைகளில் கவனமாகவும் இருக்கவேண்டும் அதேபோன்று நீரிழிவு, இருதய நோயாளர்கள், இரத்த அழுத்தம் உள்ளவர்கள் சிறுநீரக பாதிப்பு தொடர்பாக மிக அவதானமாக செயற்படும் பட்சத்தில் பாதுகாப்புப் பெற வாய்ப்பு உண்டு என்றார். (ந-5)

மனம் சோர்ந்து போவதிலும் காரணமின்றி நம்மை நாமே கேவலப்படுத்திக் கொள்வதிலும் ஒரு பயனுமில்லை. நம்பிக்கைதான் சாதனைக்கு அடிப்படை.

—ராஜாஜி

வலம்புரி

## வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா?

யாழ்.குடாநாட்டில் இயங்கும் பல்வேறு அரச நிறுவனங்களிலுள்ள பதவி வெற்றிடங்கள் வருடக் கணக்கில் நிரப்பப்படாமல் உள்ளது.

இதனால் குடாநாட்டில் படித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும் இளைஞர், யுவதிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள அரச நிறுவனங்களில் நிலவும் பதவி வெற்றிடங்கள் என்பதை நாம் இரண்டு வழிகளில் நோக்க முடியும்.

ஒன்று பதவிநிலை வெற்றிடங்கள். மற்றையது ஆளணி வெற்றிடங்கள். இதில் பதவிநிலை வெற்றிடங்கள் உள்ளக ரீதியில் பதவியுயர்வுகள் மூலம் நிரப்பப்பட வேண்டியவை.

எனினும் யாழ்ப்பாணத்திலுள்ள பல திணைக்களங்களில் பதவிநிலை வெற்றிடங்கள் ஈடுசெய்யப்படாமலுள்ளது.

இதனால் அந்த நிறுவனங்கள் தமது பணியை காலதாமதமின்றி விரைவாக வழங்க முடியாதிருக்கின்றது. அதேநேரம் அந்தப் பதவிக்கு நியமனம் பெறும் தகுதியிருந்தும் அதனை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை உரிய அமைச்சுக்களும், உயர் அதிகார மட்டங்களும் மேற்கொள்ளாததால் அலுவலர்களிடையே 'திருப்தியின்மை' உருவாகின்றது.

இது அலுவலர்களின் கடமையில் சலிப்புத் தன்மையையும், வெறுப்பையும் ஏற்படுத்திவிடும். நிர்வாக முகாமைத்துவத்தில் பதவியுயர்வுகள் முக்கியமான இடத்தைக் கொண்டுள்ளன.

உரிய காலத்தில் உரிய பதவிகளை வழங்கத் தவறும் பட்சத்தில், நிறுவனத்தின் வெளியீடுகள்-செயற்பாடுகள் மந்தமடையும் என்பது முகாமைத்துவ அறிஞர்களின் கருத்து.

எனவே யாழ்.குடாநாட்டிலுள்ள அரச திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்களில் வெற்றிடமாக வுள்ள பதவிநிலைகளை நிரப்புவதற்கும், தகுதியுடையவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமாகும்.

அதேநேரம் யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச நிறுவனங்களில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் குறித்த அமைப்பு தனது சேவையை விரைவாகவும், நிறைவாகவும் வழங்க முடிவதுடன், குடாநாட்டு இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பையும் வழங்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் உள்ளூராட்சிசபைகள் மற்றும் திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்களில் பல்தரப் பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன.

எனினும் இவற்றை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை மிகப் பெரும் துரதிஷ்டமாகும்.

ஆக, இது விடயத்தில் யாழ். அரச அதிபர் தலையிட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும், இதற்குச் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் உயர்மட்ட அதிகாரிகள் உதவ வேண்டும் என்பதும் பொது மக்களின் தாழ்மையான வேண்டுகோளாகும்.

# அரசின் பிரசாரத்தை சில எறிகணைகள் மூலம் விடுதலைப்புலிகள் முறியடித்து விட்டனர்

## சண்டே ரைம்ஸ் பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் கருத்து

(கொழும்பு)

இலங்கை அரசினால் கிழக்கு மாகாணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவந்த பிரசாரங்களை கடந்தவாரம் இடம்பெற்ற மோட்டார் எறிகணைத் தாக்குதலின் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் முறியடித்துவிட்டனர் என்று சண்டே ரைம்ஸ் வார ஏட்டில் பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

தனது ஆய்வில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் மணிக்கு 373 கிலோமீற்றர் (201 நொட்ஸ்) வேகமுடைய தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான செஸ்னா போரோன் சி-55 ரக விமானம் மட்டக்களப்பிலுள்ள விமானப்படைத் தளத்தில் யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளை தரையிறக்கியது.

ஆனால் அவர்கள் இறங்கிய சிறிது நேரத்தில் பலத்த சத்தத்துடன் நான்கு எறிகணைகள் அருகாமையில் வீழ்ந்து வெடித்தன. அருகில் வீழ்ந்த ஒரு எறிகணையினால் விமானத்தின் இறக்கைப் பகுதி சிறிது சேதமடைந்தது. மேலதிக சேதங்களைத்தடுப்பதற்காக விமானம் பாதுகாப்பு பரிசோதனைகள் கூட செய்யப்படாது அவசரமாக அம்பாறை நோக்கிக் கொண்டு செல்லப்பட்டது.

அது திருத்த வேலைகளுக்காகத் தற்போது அம்பாறையில் தரித்து நிற்கின்றது. இதனிடையே அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் இராஜதந்திரிகள் ஆகியோரை ஏற்றிக் கொண்டு ஒரு எம்.ஐ-17 உலங்கு வானூர்தியும் அதனைப் பின்தொடர்ந்து பெல்-212 ரக உலங்கு வானூர்தியும் காலை 7.30 மணியளவில் மட்டக்களப்புநோக்கிப் பயணமாகின.

இராஜதந்திரிகளும் அமைச்சரும் அரச அதிகாரிகளும் எம்.ஐ-17 உலங்கு வானூர்தியில் அமர்ந்திருந்தனர். இந்தப் பயணம் கிழக்கு மாகாணத்தின் கள நிலைவரம் தொடர்பாக இராஜதந்திரிகளுக்கு நல்லதொரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் என மகிந்த சமரசிங்க நம்பியிருந்தார்.

காலை 8.30 மணியளவில் மட்டக்களப்பின் வான்வெளியை அடைந்த இரு உலங்கு வானூர்திகளின் தரையிறக்கத்தையும் கட்டுப்பாட்டு கோபுர அதிகாரிகள் நிறுத்தி வைத்திருந்தனர்.

எனவே வான்வெளியில் இரு வானூர்திகளும் வட்டமிட்டபடி இருந்தன. அதன்போது அமைச்சர் சமரசிங்க அருகில் அமர்ந்திருந்த வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் மொகான் விஜயவிக்கரமவிடம் நாம் இறங்கும் இடத்தைத் தவற விட்டு விட்டோமா? எனக் கேட்க, எனக்கும் குழப்பமாகவுள்ளதாக அவர் பதிலளித்திருந்தார்.

25 நிமிடங்களின் பின்னர் எம்.ஐ-17 உலங்கு வானூர்திக்கு விமானப் படைத் தளத்திலிருந்து இரு கிலோமீற்றர் தொலைவிலுள்ள வெபர் விளையாட்டு மைதானத்தில் தரையிறங்க அனுமதி கிடைத்தது. 8.55 மணிக்கு தரையிறங்கிய உலங்கு வானூர்தியிலிருந்து அமைச்சர், வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர், அமெரிக்கா, யப்பான், பிரான்ஸ், இத்தாலியத் தூதுவர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் மூன்று அதிகாரிகள் மற்றும் இரு படையினர் ஆகியோர் இறங்கிய நிலையில் பாரிய சத்தங்களுடன் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின.

எறிகணைகள் வீழ்வதாக சிறப்பு அதிரடிப் படையினர் கூச்சலிட்டனர். எல்லோரும் சிதறி ஓடினார்கள். அருகிலிருந்த பவள் கவச வாகனத்திற்குள் ஏற எத்தனித்தனர். ஒரு சமயத்தில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் வேட்டி தடக்கி கீழே அவர் விழுந்துவிட்டார். எனினும் யப்பானியத் தூதுவர், மகிந்த சமரசிங்கவை மீட்டு கவச வாகனத்தில் ஏற துணைபுரிந்தார்.

இயந்திரத்தை நிறுத்தாது வைத்திருந்த உலங்கு வானூர்தியின் ஓட்டி மிகுதியான பயணிகளை இறங்க வேண்டாம் என உரத்த சத்தத்தில் கூச்சலிட்டதுடன் உலங்கு வானூர்தியை மேலெழுப்பி மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்த பெல்-212 உலங்கு வானூர்தியுடன் 40 கிலோமீற்றர் தொலைவிலுள்ள வாழைச்சேனை முகாமுக்குச் சென்றனர்.

தரையிறங்கியவர்களில் பெரும்பாலானவர்கள் வாகனங்களில் ஏறியபோதும் ஜேர்மன் மற்றும் இத்தாலியத் தூதுவர்களைக் காணவில்லை. அவர்கள் காயமடைந்ததாகச் செய்திகள் பரவின. பின்னர் தலையில் சிறிய காயமடைந்த இத்தாலியத் தூதுவருடன் ஜேர்மன் தூதுவர் வந்துசேர்ந்தார்.

இந்தத் தகவல்களை விமானப் படை ஏயர் மார்சல் டொனால்ட் பெரேரா, ஜனாதிபதியின் ஆலோசகரான பசில் ராஜபக்ஷவிற்குத் தெரியப்படுத்தினார். பசில் ராஜபக்ஷ உடனடியாக அந்தத் தகவலை சீனாவிலுள்ள ஜனாதிபதி மகிந்தவிற்குத் தெரியப்படுத்தினார். மகிந்த ராஜபக்ஷ இச் சம்பவம் இடம்பெற்றது தொடர்பாக மிகுந்த ஆத்திரமடைந்தார்.

பின்னர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரைத் தொடர்புகொண்ட பசில் ராஜபக்ஷ, ராஜதந்திரிகள் பாதுகாப்பாகத் திரும்புவதற்று ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டிருந்தார். எம்.ஐ-17 ரக உலங்குவானூர்தி மேலெழுந்த சில நிமிடங்களில் மேலும் பல எறிகணைகள் வீழ்ந்துவெடித்தன. அதில் ஒரு உலங்கு வானூர்தி தரித்து நின்ற இடத்தில் குறி தவறாது வீழ்ந்து வெடித்தது.

உலங்கு வானூர்தியின் ஓட்டி சாதுர்யமான முடிவு உலங்கு வானூர்தியையும் இராஜதந்திரிகளையும் காப்பாற்றியது. எறிகணைகளின் புகைகள் அடங்குவதற்கு முன்னர் படையினரால் தொப்பிக்கலப் பகுதியைத் தவிர கிழக்கின் மிகுதிப் பகுதிகள் விடுவிக்கப்பட்டு விட்டன என்ற பிரசாரத்தில் பாரிய சேதங்கள் ஏற்பட்டுவிட்டன.

மட்டக்களப்பின் இதயப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலே இதற்குக் காரணம். கிழக்கில் அமைதி திரும்பிவிட்டது. வழமையானஅபிவிருத்திப் பணிகள் நடைபெறுகின்றது என உலகின் முன்னணி நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை அழைத்துச் சென்று காண்பிக்க முயன்ற வேளையில் இந்த அனர்த்தம் இடம்பெற்று விட்டது.

தாக்குதல் நடத்தியோர் சில நூறு யார் தூரத்திலிருந்து இந்தத் தாக்குதலை ஒருங்கிணைத்துள்ளனர். எறிகணைகள் வீழ்வதை அவதானித்தாலே அதனைக் குறித்த இலக்கை நோக்கி ஒருங்கிணைக்க முடியும். சில நிமிடங்களில் மட்டக்களப்பு செய்தி உலகெங்கும் பரவிட்டது.

விடுதலைப்புலிகளே இது தொடர்பான பிரசாரத் தொடர்புகளை முதலில் முன்னெடுத்தார்கள். சம்பவம் இடம்பெற்ற மூன்று மணி நேரத்தில் விடுதலைப்புலிகளின் அறிக்கை 12.36 மணியளவில் வெளிவந்துவிட்டது.

அதில் சம்பவத்தின்போது ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பிரிவுத் தலைவர் மார்டின் டின் கடோகாஹ, விடுதலைப்புலிகளின் ஐக்கிய நாடுகள் சபைக்கான அதிகாரியான எம்.பாவரசனை தொடர்பு கொண்டு நிலைமையைத் தெரிவித்ததால் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் விடுதலைப்புலிகளின் உடனடியான நடவடிக்கையால் தாக்குதல் நிறுத்தப்பட்டது குறித்து மார்டீன், பாவரசனுக்கு தனது நன்றியைத் தெரிவித்ததுடன் இந்தப் பயணம் தொடர்பாக முன்னர் விடுதலைப்புலிகளுக்கு அறிவிக்காத தமது தவறையும் ஒத்துக் கொண்டிருந்தார்.

அரச இயந்திரம் விடுதலைப்புலிகளை விட விரைவாக இயங்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், அதன்அறிக்கை 2.17 மணிக்கே வெளிவந்தது. அவர்களின் தொலைத் தொடர்பு வசதிகளில் பாரிய பிரச்சினைகள் இருந்துள்ளன. ஆனால் இப்படியான மிகப் பிந்திய பிரசாரங்களால் அரசின் இயங்கு தன்மை இழக்கப்படுகின்றது.

இராஜதந்திரிகளின் மட்டக்களப்புப் பயணம் விடுதலைப் புலிகளுக்கு தெரிந்துதான் தாக்குதலை நடத்தியதாக அரச தரப்பினர் கூறி வருகின்றனர். ஆனால் இராஜதந்திரிகளைக் குறிவைத்து விடுதலைப்புலிகள் தாக்குதலை நடத்தியதாக தான் நம்பவில்லை எனவும், எனினும் விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட வேண்டுமென அமெரிக்கா கேட்டுக்கொள்ளவதாகவும் இணைத் தலைமை நாடுகளின் தலைவரும் அமெரிக்கத் தூதுவருமான றொபேட் ஓ பிளக் தெரிவித்துள்ளார்.

நான் அங்குள்ள உண்மையான நிலையை அறிந்துள்ளேன். ஊடகத்துறையின் வெற்றிகளுக்கும் இராணுவ வெற்றிகளுக்கும் உண்மை நிலைமைக்கும் உள்ளவேறுபாட்டை அறிந்து கொண்டேன் என தனது பேரைக் குறிப்பிடவிரும்பாத இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வவுணதீவுப் பகுதி அல்லது எருமைத்தீவில் இருந்தே வாகனங்களில் பொருத்தப்பட்ட 81 மில்லிமீற்றர் மோட்டார்கள் எறிகணை மூலம் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

துருப்புக்காவி வாகனங்கள் மூலம் வாழைச்சேனை முகாமுக்கு வேகமாகக் கொண்டு செல்லப்பட்ட இராஜதந்திரிகளுக்கு வாகரையைக் கைப்பற்றியது தொடர்பாக ஒரு உற்சாகமான உரையை வழங்குமாறு அமைச்சர், 23 ஆம் படைப் பிரிவுத் தளபதி தயாரட்ணாயக்காவை கேட்டுக் கொண்டார்.

அதன் பின்னர் எல்லோரும் கொழும்புக்குத் திரும்பினர். முன்னணி நாடுகளின் எல்லாத் தூதுவர்களும் கிழக்கு மாகாணம் தொடர்பாக அரசின் பிரசாரங்களில் உள்ள தவறுகளை தமது நாடுகளுக்கு நிச்சயமாக தெரிவிப்பார்கள். மேலும் தம்மை அழைத்துச் சென்றவர்கள் தமது உயிருக்கு உரிய பாதுகாப்பை அளிக்கத் தவறிவிட்டதையும் அவர்கள் எடுத்துரைப்பர்.

அவர்கள் தமது அதிகாரிகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் உண்மையை மறைக்கப் போவதில்லை. எனவே சில் மோட்டார் எறிகணைகளைப் பயன்படுத்தி அரசின் நம்பகத் தன்மைக்கு சவால் விட்டதுடன் அதில் விடுதலைப்புலிகள் வெற்றி பெற்றும் விட்டார்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## பசில் ராஜபக்ஷவுக்கு எம்.பி. பதவி கிடைக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரும் சகோதரருமான பசில் ராஜபக்ஷவை தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதியமைச்சர் மேர்வின் சில்வா, பசில் ராஜபக்ஷவிற்காக தனது பதவி விலகலை சமர்ப்பிக்க உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

மேர்வின் சில்வா அவரது மனைவியின் பதவி விலகலைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட்டார்.

இந்தப் பதவி விலகலைத் தொடர்ந்து துறைமுகங்கள் அதிகார சபையில் தலைவர் பதவிக்கு மேர்வின் சில்வா நியமிக்கப்பட உள்ளதாகவும் அவர் தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் சீனாவிற்குச் சென்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

## வல்வெட்டித்துறையில் பெண் சுட்டுக்கொலை

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை ஊரணி கொலனிப் பகுதியில் நேற்று முன்தினமிரவு 9.15 மணியளவில் வீட்டிற்குச் சென்ற ஆயுததாரிகளினால் நடாத்தப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இளம் குடும்பப்பெண் ஒருவர் கொல்லப்பட்டதுடன் அவரது கணவன் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் கொலனி குடியேற்றத்திட்டத்தில் வசித்து வரும் பரஞ்சோதி நிஷா (வயது 20) என்ற இளம் குடும்பப் பெண் கொல்லப்பட்டதுடன் அவருடைய கணவர் எஸ்.பரஞ்சோதி (வயது 23) என்பவர் படுகாயமடைந்து உணர்விழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)

## போதகர் சுட்டுக்கொலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதி புளியடிச்சந்தியில் நேற்றுக் காலை 9 மணியளவில் குடும்பத்தினருடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெந்தக்கோஸ்தே போதகர் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராசரத்தினம் ராஜசேகர் (வயது 55) என்ற போதகரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)

## கோப்பாயில் இளைஞன் பலி

கோப்பாய் இராச வீதியில் நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் இடம் பெற்ற சம்பவமொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் திருகோணமலை மாதாகோயில் பாலையூற்றைச் சேர்ந்த நாகலிங்கம் நகுலேஸ்வரன் (வயது 26) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞனின் சடலம் மார்புப் பகுதிக்குக் கீழ் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டதாகவும் சடலத்தின் அருகாமையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டையில் இருந்தே இவர் இனங்காணப்பட்டதாகவும் விசாரணையின்போது பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)

## ஓமந்தை காவலரண் மீது எறிகணைத் தாக்குதல்

ஓமந்தை முன்னரங்க காவலரண் மீது நேற்று முற்பகல் எறிகணைத் தாக்குதல் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல் சம்பவத்தின்போது மூன்று இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (ந-3)

## வவுனியாவில் இரு சடலங்கள் மீட்பு

வவுனியா மகா றம்பைக்குளம் கருபஞ்சாங்குளம் பகுதியில் நேற்று இரு இளைஞர்களினது சடலங்களை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர். சூட்டுக் காயங்களுடன் கொல்லப்பட்டிருந்த இவர்கள் மதுரைவீரன் மகேந்திரன் (வயது 24) மற்றும் பிறேம்ஜீவன் ரஞ்சன் (வயது 23) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அப் பகுதி மக்களினால் வழங்கப்பட்ட தகவலினை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சடலங்களை மீட்டுள்ளனர். இரு இளைஞர்களும் நேற்று முன் தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ந-3)

# கல்வியாளர் நேர்முகப்பரீட்சை 23-ம் திகதி இறுதிச் சந்தர்ப்பம்

(கொழும்பு)

இலங்கை கல்வியாளர் சேவை தரம் III பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சை இறுதியாக எதிர்வரும் 23-ம் திகதி வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சில் நடைபெறுமென மேற்படி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை கல்வியியலாளர் சேவை தரம் III பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த ஜனவரி 16 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 6 ஆம் திகதிவரை நடைபெற்றன.

வடக்கு கிழக்கில் நிலவும் அசாதாரண சூழ்நிலை மற்றும் போக்குவரத்து சிரமங்கள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு நேர்முகப் பரீட்சைக்கான காலம் நீடிக்கப்பட்டு வந்தது.

இந் நிலையில் அகில இலங்கை ரீதியில் கொழும்பு கல்வி அமைச்சில் நடைபெற்று வரும் நேர்முகப் பரீட்சைக்கு 40இற்கு குறைவானர்கள் சமுகம் தராமல் இருப்பதால் அவர்களையும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்துவதற்கு வசதியாக எதிர்வரும் 23 ஆம் திகதி நேர்முகப்பரீட்சை நடத்தவுள்ளதாக கல்வி அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (ந-5)

# பொருட்களின் விலையில் கணிசமான வீழ்ச்சி

## யாழ்.நீதிவானிடம் வணிகர் கழகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வாரத்தில் குடாநாட்டில் பொருட்களின் விலை கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக யாழ்.மாவட்ட நீதிபதியிடம் வணிகர் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று யாழ்.மாவட்ட நீதிமன்றில் நீதிபதி இ.த.விக்னராஜாவை சந்தித்த போதே யாழ். வணிகர் கழக நிர்வாகத்தினர் இக் கருத்தை தெரிவித்துள்ளனர். கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற நீதிபதியுடனான சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்தியதையடுத்தே இவ் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நீதிபதியுடனான இச் சந்திப்பில் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சபை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

யாழ்.குடாநாட்டிற்கு கப்பல் மூலம் பொருட்களை எடுத்துவரும் தனியார் வர்த்தகர்கள் கப்பலிலிருந்து துறைமுகத்திற்கும் துறைமுகத்திலிருந்து யாழ்.நகருக்கும் பொருட்களை எடுத்துவருவதிலும் ஏற்படும் தாமதத்தினாலேயே பொருட்களின் விலை அதிகளவிலுள்ளதாக யாழ்.அரச அதிபருக்கு தெரிவித்துள்ளதாக கூறிய வணிகர் கழகத்தினர்;

இவ்வாறு தாமதம் ஏற்படுவதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக யாழ்.அரச அதிபர் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பொருட்களை எடுத்துவரும் வர்த்தகர்கள் அரச அதிபருடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கப்பட்ட நியாய விலையில் விற்பனை செய்ய தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் நீதிபதியிடம் வணிகர் கழகத்தினர் உறுதியளித்தனர். (ந-5)

# சதுப்பு நிலக்குழியில் சடலம் மீட்பு

(கொழும்பு)

கந்தானை வேவெல பிரதேசத்தில் சதுப்பு நிலக் குழி ஒன்றிலிருந்து நேற்று சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

வேவல மயானத்திற்கு அண்மையில் இருக்கும் சதுப்பு நிலக்குழி ஒன்றில் இருந்தே இச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் அடையாளம் காண முடியாத நிலையில் இருப்பதாக கந்தானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பமுனுகம முத்துராஜவலப் பகுதியில் உள்ள சதுப்புநிலக் குழிகளில் இருந்து மீட்கப்பட்ட ஐந்து சடலங்களும் இது வரை அடையாளம் காணமுடியாத நிலையில் இராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (ந-5)

## அதிரடிப்படையினர்...

துள்ளதாகவும் தெரிவிக்கப்ப டுகின்றது.

தாக்குதல் சம்பவத்தினையடுத்து அதிரடிப் படையினர் பதில் தாக்குதல் மேற்கொண்டதாக ஊடக தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-3)

## விடுதலைப்புலிகளுடன் மகிந்த...

ஏற்பட்டதுடன் கருணாவை ஒப்படைப்பது தொடர்பான யோசனைகளை யும் நான் எதிர்த்தேன்.

இப்படியான கலந்துரையாடல் நடைபெறவில்லை என பசிலால் மறுக்கமுடியுமா? என்று கேள்வி எழுப்பிய சிறிபதி இது தொடர்பான மேலதிக தகவல்களும் விரைவில் வெளிவரும் என்றார்.

முதலாது சந்திப்பில் லக்ஷ்மன் கதிர்காமரைக் கொன்றது தொடர்பாக நான் விடுதலைப்புலிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டேன். ஆனால் கதிர்காமர் முன்னரே கொல்லப்படவேண்டியவர் என அவர்கள் தெரிவித்தனர்.

கதிர்காமரின் சேவைகள் குறித்து நான் பேசியதுடன் பெரும் வாக்குவாதங்களிலும் ஈடுபட்டேன். பின்னர் அவர்கள் கருணாவை கையளிக்க வேண்டும் எனவும் கிழக்கு மாகாணம் தமக்குத் தரப்படவேண்டுமெனவும் கோரிக்கைகள் விடுத்திருந்தனர்.

நான் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் நாம் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பது என்ற ஒரு ஒப்பந்தத்தின் மூலம் ஜே.வி.பி. , ஹெல உறுமய போன்றவற்றுடன் கூட்டுச் சேர்ந்துள்ளோம்.

எனவே அதனை உதாசீனப்படுத்த முடியாது. ஆனால்,நிதி அபிவிருத்தி செயற்பாடுகளில் ஒத்துழைக்க முடியும் எனத் தெரிவித்திருந்தேன்.

எனினும் அந்த வாக்குவாதங் களின் பின்னர் பசில் விடுதலைப்புலிகளுடன் தனியாகப் பேசியதுடன் மீண்டும் ஒரு சந்திப்பிற்கும் நாள் குறித்திருந்தார்.

அவர்களின் செயற்பாடுகளுக்கு நான் இடையூறுகள் விளைவிப்பதாகவும் எனவே என்னை அடுத்த கட்டப்பேச்சுக்களில் தவிர்க்கும்படியும் விடுதலைப்புலிகள் கூறியதாக பசில் ராஜபக்ஷ பின்னர் எனக்கு தெரிவித்திருந்தார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## வெளிநாட்டு தலையீடுகளுக்கு...

கொழும்பிலிருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதியும் எனது சகோதரருமான மகிந்த ராஜபக்ஷ தனது உயிரை துச்சமென மதித்து வாகரைக்குச் சென்றார்.

அதேபோல் அங்கே செல்ல விரும்பும் வெளிநாட்டவர்களும் ஆபத்துக்களை ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். வடக்கு கிழக்கிற்குச் செல்லும் வெளிநாட்டவர்கள் அங்கு இடம் பெறும் தாக்குதல்கள் குறித்து தம் பாட்டில் விமர்சனங்களை தெரிவிக்கக்கூடாது.

வடக்கு கிழக்கு இலங்கையின் அரசியல் எல்லைக்குட்பட்டது. அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளை அரசு தீர்மானித்துக் கொள்ளும். இது விடயத்தில் வெளிநாட்டு அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களின் தலையீடுகள்; ஆலோசனைகள் எமக்குத் தேவையில்லை.

அவற்றை நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார். இது இவ்வாறு இருக்க சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் விடுதலைப்புலிகளுடனான சந்திப்புகளுக்கு அனுமதி வழங்க பலத்த கட்டுப்பாடுகள் அண்மைக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சால் விதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## புலிகள்...

மென தங்களிடம் குறிப்பிட்டேன்.

அப்பொழுது ஐக்கிய தேசியக்கட்சியின் அணித் தலைவரும் உங்கள் தேர்தல் பிரசார முகாமையாளருமான மலிக் சமரவிக்கிரம வடக்கு-கிழக்கு வாக்கு முழுவதும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு கிடைக்குமென உறுதியளித்தார்.

இதுபற்றி மேலும் வினவியபோது விடுதலைப்புலிகளின் வாக்குகள் கையில் இருக்கின்றன என திரும்பத் திரும்பத் தெரிவித்தார். இத் தகவலின் அடிப்படையில் தங்களது பிரசார முகாமையாளர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில்தான் இத்தகைய இரகசிய உடன்பாடு இருந்திருக்க வேண்டுமென நான் சந்தேகிக்கிறேன்.

இதன்படி பார்த்தால் உங்களது அறிக்கை தான் நகைப்பிற்கிடமாக இருக்கிறது. ஏன் என்றால் முதலாவதாக வடக்கு கிழக்கு மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த விடாது விடுதலைப்புலிகள் தடுத்துள்ளனர்.

ஆனபடியால் விடுதலைப்புலிகள் மீதுதான் இவ்வாறான குற்றச்சாட்டை சுமத்தியிருத்தல் வேண்டும்.

அதைவிடுத்து விடுதலைப்புலிகளின் செயலுக்காக மகிந்த ராஜ பக்ஷவின் தேர்தல் முகாமையாளர் மீது இவ்வாறு குற்றஞ் சுமத்துவதன் மூலம் விடுதலைப் புலிகளின் செயலை மறைமுகமாக ஆதரிக்கிறீர்கள் என நான் கருதுகிறேன்.

இரண்டாவதாக மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் முகாமையாளர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான இரகசிய உடன்பாட்டினால் தான் தமிழ் மக்கள் இவ்வாறு வாக்களிக்க விடாது தடுக்கப்பட்டனர் என தாங்கள் உணர்ந்திருந்தால் உடனடியாக உயர் நீதிமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை எதிர்த்து அவரது தெரிவின் சட்ட பூர்வ தன்மைக்கு சவால் விடுத்து தேர்தல் ஆட்சேப வழக்கு தாக்கல் செய்திருத்தல் வேண்டும்.

அதை விடுத்து ஒரு வருடமும் நான்கு மாதங்களும் கழிந்த பின்னர் இவ்வாறான ஒரு அறிக்கை விடுக்கப்பட்டதையடுத்து ஆச்சரியப்படுகின்றேன்.

தற்போது சூரியாராட்சி பகிரங்கமாக இத் தகையதொரு கருத்தை வெளியிட்டதை வைத்துக் கொண்டு ஒரு பாரிய அரசியல் முரண்பாட்டினை தாங்கள் எதிர்பார்ப்பதாக நான் திடமாக நம்புகின்றேன்.

இந்த விடயத்தில் எந்தவொரு விளைவும் இந்த நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படமாட்டாது.

நீங்கள் எதிர்பார்த்த வடக்கு-கிழக்கு மக்களின் வாக்குகள் கிடைக்காததால் அதையிட்டு கவலைப்படாது அரசியல் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## அரசாங்கத்துக்கு...

அரசாங்கத்துக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் பாரிய அளவில் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அது மட்டுமின்றி 2005-ம் ஆண்டு தேர்தலின்போது விடுதலைப்புலி களுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒப்பந்தமொன்றை மேற்கொண்டிருந்தார் என்ற கருத்தும் மக்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டு வருகின்றது எனக் கூறிய அவர் இவ் விடயம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தவும் அரசாங்கத்திற்கு எதிராக பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவும் உள்ளதாகத் தெரிவித்தார். (ந-3)

## புலிகளுக்கு...

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் தொடர்பில் விடுதலைப்புலிகளின் தலைவரை கைது செய்யவேண்டும் என்றோ அவருக்கு தண்டனை அளிக்கப்படவேண்டுமென்றோ காங்கிரஸ் கட்சி கோரவில்லை எனவும் காங்கிரஸ் கட்சியின் இச் செயற்பாடு பல சந்தேகங்களுக்கு இடமளித்துள்ளதாகவும் சுப்பிரமணிய சுவாமி மேலும் தெரிவித்தார். (ந-3)

## கோத்தபாயவை...

பித்துள்ளனர். மேலும் இச் சதித் திட்டத்தில் அரசிலுள்ள சிலஅரசியல்வாதிகளுக்கும் தொடர்புகளுள்ளன.

என்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தவறியதால் தற்போது புதிய முறைமூலம் என்னைக் கொல்லத் திட்டமிட்டுள்ளனர். என்ன நடந்தாலும் பயங்கரவாதத்திற்கு எதிரான எனது போராட்டம் தொடரும் என்றார் அவர். (ந-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.